# பரிமேலழகர் உவமை விளக்கம்

30344.

புலவர் இ. சுந்தரமூர்த்தி
எம்.ஏ., டிப். மானிடவியல், தமிழ் விரிவுரையாளர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

[தமிழ்த்துறை வெளியிடும் 'தமிழாய்வு'
நான்காம் தொகுதியிலிருந்து எடுத்து வெளியிடப்பட்டது.]

சென்னைப் பல்கலைக் கழகம்

1975

# 3. பரிமேலழகர் உவமை விளக்கம்

*புலவர். இ. சுந்தரமூர்த்தி*, எம். ஏ., டிப். மானிடவியல்,
*தமிழ் விரிவுரையாளர்,*
*தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக்கழகம்.*

உவமையின் பயன் 1. 1 — பரிமேலழகரின் உவமைகள் 2. 1-3 — நாட்டுப் பழமொழி உவமைகள் 3. 1 — கரும்பு தின்பதற்குக் கூலி 3. 2-3 — பலதுளிபெருவெள்ளம் 3.4 — எரியும் நெருப்பும் எண்ணெயும் 3. 5—காட்டுத்தியும் பஞ்சும் 3.6—இலக்கிய மரபுத்தொடர் உவமைகள் 4. 1—வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமாறு போல 4.2—பசுமட்கலத்துள் நீர்போல 4. 3-4 — கயப்பூப் போல வேறுபடாது கோட்டுப் பூப்போல 4. 5-6 — ஏரலெழுத்துப்போல 4. 7-9 — ஔவை உண்ட நெல்லிக்கனி போல 4. 10-11 — காப்பியச் செய்தி உவமை 5. 1 — கட்டியங்காரன் போல 5. 2 -3— சமய புராணச் செய்தி உவமைகள் 6.1—திரிபுரம் போல 6. 2—இந்திரன் போல 6.3 —கருத்து உவமைகள் 7. 1 — மாண்பும் மாசும் 7. 2 — மடியும் நெருப்பும் 7. 3 — கடல்நடுவண் உடைந்த கலம் முதலியன 7. 4-5 — முடிவுரை 8. 1.

### உவமையின் பயன்

1. 1 எண்ணியதை எண்ணியாங்கு உணர்த்துவதற்கு உவமைகள் பெரிதும் துணையாகின்றன. கவிஞர்களின் கற்பனைப் படைப்பிலும் உவமை தனி இடம் பெற்றுத் திகழ்கிறது. பொதுவாகச் செய்யுள்களிலேயே உவமையும் உருவகமும் மிகுதியாகப் பயின்றுவரும் என்றாலும் உரைநடையிலும் நடைசிறக்கக் கருத்து இனிது புலனாக இவற்றைக் கையாளுகின்றனர். அன்றைய இலக்கணிகள் முதல் இன்றைய திறனாய்வாளர் வரை நாளும் தம் சிந்தனையாற்றலால் எண்ணி எண்ணித் தொகுப்பது உவமைகளையே எனலாம்.

### பரிமேலழகரின் உவமைகள்

2. 1 படைப்பிலக்கியத்திற்கு நிகராக உரையிலக்கியத்தை உருவாக்கிய பரிமேலழகரும் தம் உரையினுள் அழகிய செறிவான உவமைகளை எடுத்தாண்டு உரைக்கு எழிலையும் ஏற்றத்தையும் தந்துள்ளார். இவ்வகையில் பரிமேலழகரின் உவமைகள் வள்ளுவரின் கருத்துகளை விளக்கும் கலங்கரை விளக்கங்களாகத் திகழ்கின்றன.

2. 2 பரிமேலழகரின் உவமை விளக்கங்களை இருவகையாகப் பாகுபடுத்தலாம். ஒன்று வள்ளுவர் படைத்த உவமைகளுக்குத் தம் உரைநயத்தால் மேலும் விளக்கந்தருதல்;[1] மற்றொன்று கருத்து விளக்கங்களுக்காகத் தாமே தம் உரையில் அரிய உவமைகளைப் பெய்து விளக்குதல். இவற்றுள் அவர் பயன்படுத்திய உவமைத் தொடர்களைப் பற்றி ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

2. 3 பரிமேலழகர் பயன்படுத்திய உவமைகளைக் கீழ்வருமாறு வகுத்தும் தொகுத்தும் ஆராயலாம்.

1. நாட்டுப் பழமொழி உவமைகள்
2. இலக்கிய மரபு உவமைகள்
3. காப்பியச் செய்தி உவமை
4. சமய-புராணச் செய்தி உவமைகள்
5. கருத்து உவமைகள்

### நாட்டுப் பழமொழி உவமைகள்

3. 1 கருத்துகளை விளக்குவதற்கு உரையாளர்கள் மக்கள் பயன்படுத்திய பழமொழிகளையும் எடுத்தாண்டனர். பழமொழிகள் மக்களின் அனுபவ மொழிகள். இவை ஒரு வகையில் அகப்பொருள் துறையில் வழங்கும் உள்ளுறை போலவும், புறப்பொருள் துறையில் விளங்கும் பிறிதுமொழிதலணி போலவும் பொருளும் செறிவும் பெற்றுத் திகழ்வன. 'கரும்பு தின்னக் கூலியா?', 'காட்டுத் தீ முன்னர் பஞ்சுத்துய் போலும்' போன்ற பழமொழித் தொடர்கள் கருத்து விளக்கத்திற்கு வேண்டிய பொருட்செறிவு பெற்றவை. இத்தகைய பழமொழி உவமைத் தொடர்கள் பரிமேலழகர் உரையிலும் பயின்று வந்துள்ளன.

### கரும்பு தின்பதற்குக் கூலி

3. 2 கல்வி ஒருவர் இன்புறுவதற்குக் காரணமாவதோடன்றிப் பிறர் மகிழ்தற்கும் காரணமாய் அமைகின்றது. எனவே அச் சிறப்பு நோக்கியே கற்றோர் மீண்டும் மீண்டும் கல்வியை விரும்புகின்றனர். இதனைப் பரிமேலழகர்,

> " கரும்பு அயிறற்குக் கூலிபோலத் தாம் இன்புறுதற்கு உலகு இன்புறுதல் பிறவாற்றான் இன்மையின் அதனையே காமுறுவர் என்றுங் கூறினர் " —குறள் 399

என்பர்.

---

1. காண்க: குறள், பரிமேலழகர் உரை, 1, 277, 481, 490, 495, 576 முதலியன.

3. 3 'கரும்பு தின்பதற்குக் கூலியா?', 'கரும்பு தின்பதற்குக் கூலி கொடுத்ததுபோல' முதலான பழமொழித் தொடர்கள் சுருக்க மானவை. ஆனால் உள்ள உணர்ச்சியினைத் தெற்றெனப் புலப்படுத்து பவை. திருவாய்மொழி முதல் பத்திலும், ஒன்பதாம் பத்திலும் வியாக்கியான உரைகாரர் 'கரும்பு தின்னக் கூலி போன்று', 'கரும் பயிலக் கூலி கொடுக்குங் குலத்தோன்றல்'[2] என்று இவ்வுவமைத் தொடர்களைப் பயன்படுத்துவதும் எண்ணுவதற்குரியதாம்.

## பலதுளி பெருவெள்ளம்

3. 4 மழை நீர்த்துளி சிறிது சிறிதாகச் சேர்ந்து பெருவெள்ள மாகிப் பயன் தரும். கேள்வியறிவும் அவ்வாறே; சிறிது சிறிதாகச் சேர்ந்து பேரறிவாய்த் திகழும் என்பதனைப் பரிமேலழகர், 'மழைத் துளிபோல வந்து ஈண்டி எல்லா அறிவுகளையும் உளவாக்கலின்' என்பர். (குறள் 416) 'பலதுளி பெருவெள்ளம்' என்னும் நாட்டுப் பழ மொழியின் உட்பொருள் இவ்வுவமையில் நயமுற விளங்குவதைக் காணலாம்.

## எரியும் நெருப்பும் எண்ணெயும்

3. 5 விறகிட்ட நெருப்பு மேன்மேலும் பற்றி வளர்ந்து எரியும். அதுபோலவே பொருள்கள்மேல் மனம் சென்றால் ஆசைமனம் பற்றி யெரியுமே ஒழிய ஆன்மமனம் வளராது என்பது தெளிவு. இதனைப் பரிமேலழகர்,

> 'அஃது (மனம்) பொருள்கள்மேல் செல்லின் அந்நுகர்ச்சி விறகு
> பெற்றதழல் போல் முறுகுவதல்லது' —(குறள் 343

என்னும் உவமையால் விளக்குவர். 'எரிகின்ற நெருப்பினுள் எண்ணெய் வார்த்ததுபோல' என்ற நாட்டுப்புற மக்களின் பழமொழிப் பொருட் செறிவு இவ்வுவமையில் ஓரளவு ஒளிர்கின்றது தெளிவாம்.

## காட்டுத்தீயும் பஞ்சும்

3. 6 காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய் (குறள் 360)

என்பது மெய்யுணர்தலில் உள்ள குறட்பா. ஞானயோகங்களில் முதிர்ச்சி உடையார்முன் விருப்பு, வெறுப்பு அறியாமை ஆகிய இம் மூன்று குற்றங்களும் வராமற் கெடும் என்பது இதன் கருத்து.

இக் கருத்தினைப் பரிமேலழகர் விளக்கும்போது பொருள் இனிது புலனாவதற்கு எளிய உவமையினைப் பயன்படுத்துன்றார். காட்டுத்தீ

---

2. திருவாய்மொழி முதல் பத்து, ஆறாந் திருமொழி.

முன்னர் பஞ்சு விரைவில் அழிந்து படும். பெரும்பெரும் வலிய மரங்களே காட்டுத்தீ முன்னர் துகளாகும்போது மெல்லிய பஞ்சின் நிலை என்னாகும்? ஞானயோகத்தின் முன்னர் இம் மூவகைக் குற்றங் களும் எரிந்துவிடும் என்பதனை,

> இடையறாத ஞான யோகங்களின் முன்னர் இக்குற்றங்கள்
> மூன்றும் காட்டுத்தீ முன்னர் பஞ்சுத்துய் போலும்

என்னும் உவமையால் விளக்குவர்.

பரிமேலழகரின் இவ்வுவமை நயத்தால் ஞான யோகத்தின் வலிமையும், அவ் வலிமையின் முன்னர் மூன்று குற்றங்கள் அழிந்து படுகின்ற எளிமையும் இனிது புலனாகின்றன.

நாட்டுப்புற மக்களின் உள்ளங்களில் ஊறிநின்ற இப் பழமொழிகள் பரிமேலழகரின் விளக்கவுரையிலும் இடம்பெற்று விளங்குவது இவ் வுவமைகளால் நன்கு தெளிவாகின்றன.

### இலக்கிய மரபுத்தொடர் உவமைகள்

4.1 பரிமேலழகர் தமக்கு முன்னும், தம்முடைய காலத்தும் இருந்த இலக்கிய இலக்கண நூல்களையெல்லாம் நன்கு கற்றுணர்ந்த அறிஞர்.[3] தங்க அணிகலனில் வைரம் பதித்தாற் போன்று உரை யினிடையே அவ்விலக்கிய இலக்கண அருந்தொடர்களைப்பெய்து, உரைக்கு அழகும் அமைப்பும் சேர்த்த அருங்கலைஞர். எனவே மேற் கோள்களுள் பல இலக்கிய மரபுத் தொடர் உவமைகளாக விளங்கு வதும் எண்ணுவதற்கு உரியதாகும்.

### வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமாறுபோல

4.2 'அறிவில்லாத பேதையரொடு நட்புக் கொண்டாலும், அந் நட்பு அறிவிலாதவர் நட்பு என அறிந்ததும் அதனை விட்டுவிடுவதே அவனுக்கு வாய்த்த நல்ல பேறாகும்' என்பதனை வள்ளுவர்,

> ஊதிய மென்பது ஒருவற்குப் பேதையார்
> கேண்மை யொரீஇ விடல் (குறள் 797)

என்னும் குறளால் கூறுவர். நட்பினை ஒழித்தாலும் அவனை விட்டு நீங்காவிடில் துன்ப மிகும். இதனைப் பரிமேலழகர் உவமைவழி நன்கு விளக்குவர்.

---

3. காண்க: பரிமேலழகர் மேற்கோள் விளக்கம் — இ. சுந்தர மூர்த்தி, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக் கருத் தரங்கக் கட்டுரை.

"நட்பு ஒழிந்தாலும் நீங்காக்கால் **வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமாறு போலத் தீங்கு வரும்**"

என்பர். மணம் தருகின்ற சந்தனமரமும் வேங்கைமரமும் மூங்கிலின் சேர்க்கையால் வெந்தழிவது போலப் பேதையாரின் நட்பு அவரைச் சார்ந்த நல்லோரையும் அழிக்கும் என்பதே இவர்தரும் உவமை விளக்கம். நட்பாராய்ந்து ஒழுகுதற்குத் தம் சிந்தனையாற்றலால் ஒப்பிட்டு விளக்கும் இவருடைய கருத்துநயம் பெரிதும் போற்றுவதற்கு உரியது. பன்னூல் பயிற்சி மிக்காரான பரிமேலழகர் நாலடியின் நற்றமிழை நன்கு ஓதி உணர்ந்தவர். இக் கருத்து,

மனத்தான் மறுவில ரேனுந் தாஞ் சேர்ந்த
இனத்தா லிகழப் படுவர்—புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனந் தீப்பட்டக் கால்[4]

என்னும் நாலடியாரிலும் உவமையாக வந்திருப்பது உளங்கொளற் குரிய ஒன்றும்.

*பசுமட்கலத்துள் நீர்போல*

4.3 வஞ்சனை வழியால் பொருள் சேர்த்து அதனைக் காப்பாற்றுதல் என்பது பச்சைமண் கலத்துள் நீரைவிட்டுக் காப்பது போன்றதாகும் என்பர் வள்ளுவர்.

அறத்தையும் அரிய உவமையால் உணர்த்தும் வள்ளுவப் பெருந்தகையின் அழகிய இவ்வுவமை,

சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துள்நீர் பெய்திரீஇ யற்று (குறள் 660)

என்னும் குறட்பாவில் இனிது விளங்குவதைக் காணலாம். வள்ளுவர் எடுத்தாண்ட இவ்வுவமையினையே பரிமேலழகர்,

அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல் (குறள் 755)

என்னும் குறட்பாவின் விளக்கவுரைக்குப் பயன்படுத்துவர்.

4.4 அருளோடும் அன்போடும் பொருந்தாத வழிகளில் வந்த செல்வத்தின் ஆக்கத்தைப் பெற்று மகிழாமல் அதைத் தீமையானது என்று நீக்கிடவேண்டும் என்பது இக் குறட்பாவின் கருத்தாகும்.

---

4. நாலடி. நல்லினம் சேர்தல், 17.

"அவ்வாறு வாராத பொருளீட்டம் பசுமட்கலத்துள் நீர் போலச் செய்தானையும் கொண்டு இறத்தலின்"

என்பது பரிமேலழகருடைய விளக்கவுரை. இங்குக் குறட்தொடரையே உவமைத் தொடராக்கும் பரிமேலழகரின் திறம் எண்ணி வியத்தற் குரியதாய் இலங்குகின்றது.

### கயப்பூப்போல வேறுபடாது கோட்டுப்பூப்போல

4.5 அறிவுடைமையின் பயன் உலகத்தைத் தழுவுவது. முன்னே மகிழ்ந்து விரிதலும் பின்னே வருந்திக் குவிதலுமில்லாத இயல்பினது அறிவு.

உலகந் தழீஇய தொட்பம் மலர்தலும்
கூம்பலு மில்ல தறிவு (குறள் 425)

என்னும் குறட்பாவில் வள்ளுவர் இதனைக் கூறுவர். வள்ளுவர் கருத்துக்கு விளக்கம் வரைந்த பரிமேலழகர், 'மலர்தலும் கூம்புதலு மில்லாத அறிவினுக்கு' இயற்கை நெறியோடு இயைந்த காட்சி ஒன்றினையே உவமையாக்குகின்றார்.

4.6 நீர் நிலையிலுண்டாகும் பூக்கள் மலர்தலுங் குவிதலுமாகத் தாம் அழிகிறவரை நிலை மாறுதல்களைப் பெறும். ஆனால் கோட்டுப் பூவோ (மரக்கிளையிலுண்டாகும் பூக்களோ) ஒருகால் மலர்ந்தது மீண்டும் குவியாமலே அழிகிறவரை இருக்கும். மலர்தலும் குவிதலு மான இருவகை நிலைகள் கோட்டுப்பூக்களிடத்தில்லை. அறிவார்ந்த நட்பும் இத்தகைய இயல்பினதேயாம். எனவேதாம் பரிமேலழகர்,

"அவரோடு **கயப்பூப்போல** வேறுபடாது **கோட்டுப்பூப் போல** ஒருநிலையே நட்பாயினன்எல்லா வின்பமும் எய்தும் ஆகலின் அதனை அறிவு என்றார்"

என்பர். மலர்தலும் கூம்புதலுமில்லாத அறிவினுக்குக் கோட்டுப் பூவினை உவமையாக்குகின்றார் பரிமேலழகர். இவ்வுவமை விளக் கத்திலும் ஈரடியின் புகழ்பாடும் நாலடியின் நற்றமிழே எதிரொலிப் பதை நன்கு காணலாம்.

கோட்டுப் பூப்போல மலர்ந்து பிற்கூம்பாது
வேட்டதே வேட்டதா நட்பாட்சி—தோட்ட
கயப்பூப்போல் முன்மலர்ந்து பிற்கூம்பு வாரை
நயப்பாரும் நட்பாரு மில்.[5]

என்னும் நாலடிப் பாட்டின் உவமையே பரிமேலழகரின் உவமையாக மலர்ந்திருக்கிறது எனலாம்.

---

5. நாலடி. 215.

*ஏரலெழுத்துப்போல*

4.7 கல்லாதவனுடைய அறிவுடைமை ஒரோவழி மிக நன்றாக இருப்பினும் அறிவுடையோர் அதனை அறிவின் பகுதியாக ஏற்றுக் கொள்ளமாட்டார் என்பதனை வள்ளுவர்

கல்லாதா னொட்பங் கழியநன் றாயினும்
கொள்ளா ரறிவுடை யார் (குறள் 404)

என்னும் குறளால் கூறுவர். கல்லாதவனுடைய அறிவுடைமைக்குச் சான்றுதர விழைகின்றார் பரிமேலழகர். எண்ணி எண்ணி அவர் தருகின்ற உவமை விளக்கம் வள்ளுவரின் கருத்திற்கு வலிவும் பொலிவும் அளிப்பதாய்த் திகழ்கிறது.

4.8 ஆற்றின் கரையோரங்களில் நத்தை ஊர்ந்து செல்லும்போது கோடுகள் தோன்றும். அக் கோடுகள் சிலவேளைகளில் எழுத்துக்கள் போலவும் தோற்றந் தருவன. ஆனால் அவற்றை எழுத்துக்கள் எனப் போற்றார் அறிவுடையோர். அத்தகையதே கல்லாதவனுடைய ஒட்பமும் என்பர் பரிமேலழகர்.

"ஒண்மை — அறிவுடைமை. அது நன்றாகாது ; ஆயிற்றாயினும் ஏரலெழுத்துப்போல்வ தோர் விழுக்காடு. ஆகலின் நிலை பெற்ற நூலறிவுடையார் அதனை மதியாரென்பதாம்"

என்பது அவர்தரும் விளக்கம்.

4.9 பழமொழி நானூற்றில் வரும், "ஆகுமோ நந்து உழுதவெல் லாம் கணக்கு"[6] என்ற தொடரும் இங்கு ஒப்பு நோக்கற்குரியது. நான்காம் திருமொழியில் வியாக்கியான உரைகாரர், "புழுக்குறித்தது எழுத்தானாற்போல இங்ஙனே வாய்த்துக்கொண்டு நிற்கக் கண்ட தித்தினை" என்பர்.[7] திருவரங்கத்தந்தாதியிலும்,

'மானத்து வண்டல் உழ ஓர்எழுத்தின்
வடிவுற்ற சீர்மான'

என்று இக் கருத்து வருவதும் எண்ணுவதற்குரியது.[8]

'நந்து நாகு வண்டு சென்னடைவழி யெழுத்தாய்
வந்து வீழினும் வீழும்'

என்ற இலக்கியத் தொடரும் இதனோடு வைத்து எண்ணத்தக்கது.[9]

---

6. பழமொழி, 245.
7. நான்காம் திருமொழி, 588, உரை.
8. திருவரங்கத்தந்தாதி. (மே. கோ. திருவாய்மொழி, தொ. 6 பக். 191)
9. திருக்குறள், 404 பரிமேலழகர் உரை, வை. மு. கோ. விளக்கம்.

இங்ஙனம் இவ்வுவமைத்தொடர் பல இலக்கியங்களில் பயின்று வருவது உளங்கொளத் தக்கது.

**ஔவை உண்ட நெல்லிக்கனிபோல**

4. 10 அதிகன் ஔவைக்கீந்த நெல்லிக்கனி பற்றிச் சிறுபாணாற்றுப்படையும், புறநானூறும் புகழ்ந்து பேசுகின்றன.

...........மால்வரைக்
கமழ் பூஞ்சாரல் கவினிய நெல்லி
அமிழ்து விளை தீம்கனி ஔவைக்கு ஈந்த
உரவுச் சினம் கனலும் ஒளிதிகழ் நெடுவேல்
அரவக் கடல்தானை அதிகனும்...[10]

என்று சிறுபாணாற்றுப்படையும்,

நீயே தொல் நிலைப்
பெருமலை விடரகத்து அருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீம்கனி குறியாது
ஆதல் நின் அகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீந்தனையே.[11]

எனப் புறநானூறும் அதிகனீந்த நெல்லிக்கனியைப் பாராட்டிப் புகழ்கின்றன.

4. 11 பண்டைத் தமிழிலக்கியங்களில் பெரிதும் உளம் தோய்ந்த பரிமேலழகரோ இச் செய்தியை வள்ளுவரின் கருத்து விளக்கத்திற்கு உவமையாக்கி உரைக்கு எழில் கூட்டுகின்றார்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று (குறள் 100)

என்னும் குறட்பாவின் விளக்க உரையில் 'இனியகனிகள் என்பது **ஔவை உண்ட நெல்லிக்கனி போல** அமிழ்தானவற்றை' என்பர். இவ்வுவமையால் கருத்துத் தெளிவு பெறுவதோடன்றி வரலாற்றுச் செய்தியையும் அறிய முடிகிறது.

**காப்பியச் செய்தி உவமைகள்**

5. 1 காப்பியங்களும், காப்பியச் செய்திகளும் பரிமேலழகரின் உரை விளக்கத்திற்குப் பெரிதும் துணை நிற்கின்றன. சிலம்பும், சிந்தாமணியும் இவர்தம் உள்ளத்தை ஈர்த்தவை என்பதனை இந் நூல்களிலிருந்து அவர் எடுத்துக்காட்டும் மேற்கோள்கள் இனிதுணர்த்தும்.

10. சிறுபாணாற்றுப்படை, 99-103.
11. புறநானூறு, 91.

காப்பியங்களுள்ளும் அவர் உரையில் மிகுதியாக இடம்பெற்றது சிந்தாமணிக் காப்பியமே. சமணக் காப்பியத்தில் உள்ளம் ஒன்றிய வைணவ உரைகாரர் பரிமேலழகர்.

### கட்டியங்காரன் போல

5.2 காப்பியமாந்தன் ஒருவனின் இயல்பை வள்ளுவரின் குறட்பா விளக்கத்திற்கு உவமையாக்குகின்றார் பரிமேலழகர். எல்லாவகையாலும் ஆராய்ந்து தெளிந்தபிறகும் செயல் வகையால் வேறுபடுகின்ற மக்களும் இவ்வுலகில் உண்டு என்பதனை வள்ளுவர்,

> எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
> வேறாகும் மாந்தர் பலர் (குறள் 514)

என்னும் குறட்பாவால் கூறுவர்.

5.3 தன்னையே நம்பிய மன்னன் சச்சந்தனைக் காலம் வந்தபொழுது கொன்று ஆட்சியைத் தனதாக்கிக் கொண்ட 'வினைவகையால் வேறாகிய' பண்பு பெற்ற கட்டியங்காரனை 'வேறாகும் மாந்தருக்கு' உவமையாக்குகின்றார் பரிமேலழகர்.

> "கட்டியங்காரன் போல அரசவின்பத்தினை வெஃகி விகாரப் படுவதல்லது அதனைக் குற்றமென்றொழிந்து, தம் இயல்பில் நிற்பார் அரியராகலின் 'வேறாகுமாந்தர் பலர்' என்றார்"

என்பது பரிமேலழகர் உரை.

கட்டியங் காரனின் உள இயல்பினை உவமை விளக்கத்திற்குப் பயன்படுத்தும் பரிமேலழகரின் உரைநயம் - உவமைநயம் பெரிதும் எண்ணி மகிழ்தற்குரியதாம்.

### சமய — புராணச் செய்தி உவமைகள்

6.1 கருத்து விளக்கத்திற்காக உரைகாரர்கள் சமயக் கருத்துகளையும் கதைகளையும் கூறி விளக்குதலும் உண்டு. திருக்குறள் பரிதியார் உரையில் இத்தகைய சமயக் கருத்துகளும், கதைகளும் நிறைய வந்துள்ளன.[12] பரிமேலழகரும் ஈரிடங்களில் சமயக் கருத்துப் பொதிந்துள்ள உவமைகளை எடுத்தாள்கின்றார்.

### திரிபுரம் போல

6.2 தவமுடையோர் சினந்தால் அரண், படை, பொருள், நட்பு முதலிய காப்புகளைப் பெற்றிருந்தாலும் அவரை எதிர்த்தோர் அழிந்து விடுவர் என்பர் வள்ளுவர்.

---

12. குறள், (பரிதியார் உரை) 2, 5, 8, 296, 310, 346, 388 முதலியன.

இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின் (குறள் 900)

என்பது அக் குறட்பா.

இதன் விளக்கவுரையில் பரிமேலழகர் சிவபிரானது ஆற்றலால் மும்மதிலும் கொண்ட திரிபுரம் அழிந்த செய்தியினை உவமையாக்கி விளக்குவர்.

"அவையெல்லாம் வெகுண்டவரது ஆற்றலால் திரிபுரம்போல அழிந்துவிடுமாகலின் 'உய்யார்' என்றார்"

என்பது பரிமேலழகர் கூற்று. இங்குத் திரிபுரம்போல என்ற புராணக் கருத்து உவமை விளக்கத்திற்குப் பயன்படுவதைக் காணமுடியும்.

**இந்திரன் போல**

6. 3. பிறனில் விழையாமை அதிகாரத்தில்,

எனைத்துணையர் ஆயினும் என்னும் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல் (குறள் 144)

என்னும் குறட்பாவின் விளக்கவுரையில் எல்லாப் பெருமையுமிழந்த இந்திரனை உவமையாக்கிப் பரிமேலழகர் நயமுற விளக்குவர்.

எத்துணைப் பெருமையுடையவனாலும் பிறனில் விழைந்தவன் விரைவில் சிறுமையடைவான் என்பது திண்ணம். சமய புராணக் கருத்துகளின்படி மிக உயர்ந்த பதவி இந்திர பதவி என்பர். அப் பெருமையினையே இழந்த இந்திரனை இதற்குச் சான்றுகாட்டி,

"இந்திரன்போல எல்லாப் பெருமையும் இழந்து சிறுமையெய்தல் நோக்கி 'என்னும்' என்றார்"

என்று கூறி விளக்குவர் பரிமேலழகர்.

பிறர் மனையினை விழைந்த இந்திரனின் இறுதிநிலையினைச் - சிறுமை நிலையினை உவமையாக்கி, வள்ளுவர் கூறவந்த கருத்தை உள்ளத்தில் தெற்றெனப் பதிக்கின்றார் பரிமேலழகர்.

**கருத்து உவமைகள்**

7. 1. கருத்துக்குக் கருத்து வகையாலே உவமை கூறுவதும் ஒரு வகை மரபு. இருவேறு கருத்துகளை ஒருங்கிணைத்தும் ஒப்பிட்டும் காட்டித் தாம் கூற விழைந்த கருத்துக்கு வலிவையும் பொலிவையும் தருகின்றார் பரிமேலழகர். அவற்றுள் ஒரு சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

### மாண்பும் மாசும்

7.2 உயர்ந்த பண்பாளனிடத்துள்ள சிறுகுறையும் பெரிதாகத் தோன்றும். வெண்மையான ஆடையில்தானே மாசும் தெளிவாகத் தெரியும். இக் கருத்தினைப் பரிமேலழகர் உவமையாக்கி விளக்குவர். 'இரந்து கேட்கத்தக்கவரைக் கண்டால் அவரிடம் இரக்க வேண்டும். அவர் இல்லையென்று ஒளிப்பாராஞல் அது அவர்க்குப் பழி ; தமக்குப் பழியன்று' என்பர் வள்ளுவர். பரிமேலழகர் இதனை,

> ' தூ வெள்ளறுவைக்கண் மாசுபோல அவர்கட்
> கடிதுசேறலின் அவர் பழி' (குறள் 1051)

என்னும் உவமைவழி விளக்குவர்.

### மடியும் நெருப்பும்

7.3 மடியின் தீயது பிறிதில்லை ஆதலால் மடியை மடியாகவே கருதி ஒழுக வேண்டும் என்று குறட்பா கூறும். இக் கருத்துக்கு இணையாக வேறொரு கருத்தினைக் கூறி உவமை விளக்கம் தருவர் பரிமேலழகர்.

> "நெருப்பிற் கொடியது பிறிதின்மை பற்றி நெருப்பை நெருப்பாகவே கருதுக என்றாற் போல, மடியின்தீயது பிறிதின்மை பற்றி பின்னும் அப்பெயர்தன்னனே கூறினர்."
>
> (குறள் 602)

என்பது பரிமேலழகரின் உவமை—உரை விளக்கமாகும்.

### கடல்நடுவண் உடைந்தகலம்—முதலியன

7.4 அரணுகிய காப்புப் பெருமையினை இழந்தால் கடல்நடுவண் உடைகலத்தார் போன்று (741) ஏமங்காணுது இறுவர் என்றும், பெரியார் துணையில்லாத காவலற்ற அரசன் 'பாகனில்லாத யானை போல' (448) நெறியல்லா நெறிச் சென்று கெடும் என்றும் கருத்து வமைகள் தந்து விளக்குவர். குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவனுக்கு இணையாக அறிவினை ஒப்பிட்டுக் காட்டுவர்.

> 'குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன்போல்
> வேருக்கி மனத்தைப் புலமறிந்து செலுத்துவது அறிவு'
>
> (குறள்422)

கண்ணேட்டமில்லாத அரசனிடத்து வாழ்வது புலியை அடைந்த புல்வாயினம் போல (571) அச்ச வாழ்வினது என்பர்.

7.5 இங்ஙனம் கருத்தினை விளக்குதற்கு ஏற்ற இணையான கருத்துகளைத்தம் சிந்தனையாற்றலால் பெய்து எளிமையாக விளக்குவது இவருடைய உரையியல்புகளுள் ஒன்றாகத் திகழ்கிறது.

*முடிவுரை*

8.1 உவமையே ஒருவரின் நுண்திறனைக் காட்டும் அளவுகோல் எனலாம். அவ்வகையில் பரிமேலழகர் நுட்பமாகக் கூறிய உவமைகள் பொருளை விளக்குவதுமட்டுமன்றி அந்தப் பொருள்களை அப்படியே நம்முடைய மனத்தில் படைத்து விடுகின்றன. பரிமேலழகர் பயன்படுத்திய உவமைகளைத் தொகுத்துப் பார்க்கும்போது (காண்க—இணைப்பு) அவருடைய நுண்ணறிவின் நுட்பமும் இலக்கிய ஆய்வின் திட்பமும் இனிது புலனாகின்றன. நாட்டுப் பழமொழியாயினும் இலக்கிய மரபுத் தொடராயினும் ஏற்றவகையில் அவருடைய உரையில் இணைந்தும் இழைந்தும் காணப்படுவதை இவ்வுவமைகள் நன்கு புலப்படுத்துகின்றன. கற்பனைவளம், கருத்துவளம், படைப்போர் காலத்துப் பயின்ற பொருள்களின் தன்மை, பயன், பழக்கவழக்கங்கள், பண்பு, வழிவழி வந்த மரபு, மரபுத் தொடர்கள் முதலியன இவருடைய உவமை விளக்கத்தால் நன்கு புலனாகின்றன எனலாம். சுருங்கக் கூறின் பரிமேலழகரின் உவமை விளக்கத்தால் வள்ளுவர் உணர்த்த விழைந்த கருத்து மேலும் வலிவும், இனிமையும் தெளிவும் செறிவும் பெற்றுக் கற்பார்க்குப் பேரின்பம் நல்குகிறது என்பது வெள்ளிடைமலை.

***இணைப்பு—1***

## பரிமேலழகர் உவமை

(அகரநிரல்)

| உவமை | பொருள் | குறள் உரை |
|---|---|---|
| இந்திரன்போல | பிறனில் விழைந்தான் அடையும் சிறுமை | 144 |
| ஏரலெழுத்துப் போல | கல்லாதான் ஒட்பம் | 404 |
| ஒருவர் கூறை எழுவர் உடுத்து என்றாற்போல | 'ஒருநாள் எழுநாள் போற் செல்லும்' என்பதற்கான மேற்கோள் உவமைச்சான்று | 1269 |
| ஓளவை உண்ட நெல்லிக் கனிபோல | இனிய காய்கள் | 100 |

| உவமை | பொருள் | குறள் உரை |
|---|---|---|
| கட்டியங்காரன் போல | வினைவகையால் வேறுகும் மாந்தர் | 514 |
| கடல் நடுவண் உடை கலத்தார் போன்று ஏமங்காணுது இறுவர் | அரணை இழந்தவர் அழிதல் | 741 |
| கடன் கொண்டான் தோன் றக் கடன் தோன்றுமாறு போல | அரிய பிழைகள் செய்தவனைக் காணுந்தோறும் அப் பிழைகள் நினைவுக்கு வருதல் | 693 |
| கயப்பூப்போல வேறு படாது கோட்டுப்பூப்போல ஒருநிலை | நிலையான நட்புணர்வு உடையார் | 425 |
| கரும்பு அயிறற்குக் கூலி போல | தானின்புறுதற்கு உலகு இன்புறு தல் | 399 |
| காஞ்சிரங்காய் போல நஞ் சாவனவற்றை | இன்னாத காய்கள் | 100 |
| காட்டுத்தீ முன்னர் பஞ்சுத்துய்போலும் | ஞான யோகத்தின் முன்னர் காமம், வெகுளி, மயக்கம் மூன்றும் கெடல் | 360 |
| குதிரையை நிலமறிந்து செலுத்தும்வாதுவன்போல | மனத்தைப் புலமறிந்து செலுத் தும் அறிவு | 422 |
| சேர சோழ பாண்டியர் போல | தொன்றுதொட்டு வருகின்ற பழங்குடி | 955 |
| திரிபுரம் போல | தவமுடையோரின் சினத்திற்கு அரணுடையோரும் அழிதல் | 900 |
| தூவெள்ளறுவைக்கண் மாசு போல | ஈபவர் ஈதலில் குறைகாட்டின் அவரிடத்துச் சேரும் பழி | 1051 |
| நெருப்பிற் கொடியது பிறி தின்மை பற்றி நெருப்பை நெருப்பாகவே கருதுக என்றாற்போல | மடியை மடியாகவே கருதுதல் | 602 |

| உவமை | பொருள் | குறள் உரை |
|---|---|---|
| பசுமட்கலத்துள் நீர்போல செய்தானையுங் கொண்டு இறத்தல் | தீயவழியில் தேடிய பொருள் ஈட்டியவனோடும் சேர்ந்தழிதல் | 755 |
| பாகனில்லாத யானைபோல நெறியல்லா நெறிச்சென்று கெடுதல் | பெரியாரைத் துணைக்கொள்ளாத மன்னனும் அவ்வாறே கெடுதல் | 448 |
| புல்லா வெழுத்திற் பொருளில் வறுங்கோட்டி என்புழிப் போல | நூற்பொருளறிவில்லாத கல்லாதவர், அறிஞர் அவையில் ஒரு பொருள் குறித்துப் பேசுதல் | 401 |
| புலியை அடைந்த புல்வாயினம் போல | கண்ணோட்டமில்லாதவரிடத்து வாழும் குடிமக்கள் | 571 |
| மது மறைந்துண்டோர் மகிழ்ச்சி போல | உள்ளத்துள்ளே மகிழ்தல் | 1099 |
| மழைத்துளி போல | கேள்வியறிவு சிறிது சிறிதாகச் சேர்ந்து வளர்தல் | 416 |
| விறகுபெற்ற தழல்போல் | மனம் பொருள்கள்மேல் செல்லுதல் | 343 |
| வினைகள் போல உயிரின்கட் கிடந்து | கல்வியும் உயிர் செல்லுமிடத்துச் செல்லுதல் | 398 |
| வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமாறு போல | அறிவிலாருடன் உள்ள தொடர்பு சேர்ந்தாரையும் அழித்தல் | 797 |